**செய்தி வெளியீடு எண்: 71** **நாள்: 28.01.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (28.1.2020) தலைமைச் செயலகத்தில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்,

- உணவு பாதுகாப்பையும், ஊட்டச்சத்து மேம்பாட்டையும் அடைதல் மற்றும் நிலையான வேளாண்மையை மேம்படுத்துதல்
- அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவ, தரமான கல்வியை உறுதி செய்தல்
- அனைத்து பெண்களையும் அதிகாரமடைய செய்தல்
- நிலையான நீர் மேலாண்மையின் வாயிலாக, அனைவருக்கும் குடிநீர் மற்றும் சுகாதார வசதி கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல்
- பருவநிலை மாறுபாட்டையும், அதன் தாக்கங்களையும் எதிர்கொள்ளக்கூடிய வகையிலான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- நிலைத்த வன மேலாண்மை, பல்லுயிர் இழப்பை தடுத்து நிறுத்துதல்
- நீடித்த வளர்ச்சிக்காக அமைதியான, சமுதாயங்களை வளர்த்தெடுத்தல்

ஆகிய இலக்குகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசுகையில், நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்தியதில் தற்போது தமிழ்நாடு இந்தியாவிலேயே மூன்றாம் இடத்தில் உள்ளது. வரும் ஆண்டில் நமது மாநிலம் முதலிடத்தை பெறும் வகையில் அனைத்துத்துறை செயலாளர்களும் ஒருங்கிணைந்து மேலும் திறன்பட பணியாற்றிட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

இந்தக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஒட்டெம் டாய், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு.நா. முருகானந்தம், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்கே. கோபால், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. ஆ. கார்த்திக், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திரு.சி. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**